ஜனவிநோதினி.

இல. 11.] நவம்பர்மீ 1876. [புஸ்த. VII.

தார்த்தாரிய தேசம்.

சீனராஜ்யத்திற்கு வடமேற்கு மூலையில் துர்க்கிஸ்தானத்திற்கு வடகிழக்கே ஜங்கேரியா என்று ஒரு தேசமுண்டு. அது சாதாரணமாய் மலைப்பிராந்தமாயிருந்தாலும், பூமியெங்கும் செழிப்புநிலமாகையாலும் ஐலி என்கிற நதியும் அதின் உபநதிகளும் பாய்ந்து நீர்வளம்பெற்றிருப்பதாலும் பயிர்த்தொழிலுக்கு மிகவும் ஏற்றதாயிருக்கின்றது. இந்த ஆசியாகண்டத்திலுள்ள செழிப்பான பூமிகளில் அதுவும் ஒன்றாகச் சொல்லலாம். அத்தேசத்துச் சீதோஷ்ணநிலை வாசஞ்செய்ய மிகவும் அனுகூலமானது. அதை யடுத்த சைபீரியாதேசத்தின் தென்பாகத்தைப்போல் அங்கே சீதகாலங்களில் சீதம் அவ்வளவு கொடுமையானதன்று, உபாயந்தான். அங்கே குளிர் மூன்றுமாதந்தான் அதிகம்; அப்போது சீதோஷ்ணமளக்குங்கருவி, தோய்ந்துபோகிற அளவுக்கு இருபத்தினான்கு (அம்சம்) டிக்கிரீ கீழேவந்து நிற்கும். வெப்பம் சில்காலங்களில் கொஞ்சம் உக்கிரமாயிருப்பதுண்டு. அப்போது அந்தக் கருவி 113 டிக்கிரீ முதல், 117½ டிக்கிரீவரையில் செல்லும். ஆதலால் அத்தேசம் வஸிப்பதற்கு மிகவும் அனுகூலமானவிடம். அதையடுத்த சீனதேசம்முதலியவிடங்களில் சீதளத்தைப்பற்றி உண்டாகிற ரோய்களொன்றும் அங்கே உண்டாவதில்லை. ஐலி நதிக்கரையிலிருக்கிற கல்ஜாநகர் அதற்குப் பிரதானபட்டணம். அதில் கடைத்தெரு முக்கியமானது. அங்கே சீனதேசத்து வியாபாரிகள் வந்து வியாபாரஞ் செய்வார்கள். அதன் தெருக்களில் பழம் பணியாரம் முதலியவைகள் கொண்டுவந்து பண்டமாற்றல் செய்கிற கூச்சலைக்கேட்டால் காது செவிடாய்ப்போம்போலிருக்கும்.

அத்தேசத்தில் கால்மக் என்கிற ஜாதியாரும் தார்த்தாரியருமாய் இரண்டுவகை ஜனங்கள் வஸிக்கிறார்கள். அவர்களுள் முதல் ஜாதியார் முன் சீனதேசத்தார் படையெடுத்தபோது மேற்புறத்திற்கும் வடமேற்கு மூலைக்கும் ஓடிப்போய் மறுபடி கொஞ்சகாலங்கழித்து வந்து குடியேறினார்கள். அந்தக் கால்மக் ஜாதியாருடைய கேடுகெட்ட குடிசைகளில் போய்த் தங்குவதைவிட வெட்டவெளியிலிருக்கலாமென்று ஒருவர் சொல்லியிருக்கிறார். ஆனால் அது அவர்கள் மதத்துக்கு விரோதக்கோட்பாடுள்ள ஒரு மகம்மதியருடைய கருத்தாய்த் தோன்றுகிறது.

அவர்களுக்கு டேகஸ் நதியண்டையும் ஐலி நதிக்கரையிலுமாய் இரண்டு கோயில்களுண்டு. அவர்களுடைய குருக்கள் குளிர்காலங்களில் தம் சிஷர்களோடு ஐலி நதிக்கரையிலுள்ள கோயிலில் வந்து வாசம்பண்ணுவார். அங்குள்ள கனவான்கள், தனிகர்முதலியவர்களும் அநேகமாய் அக்காலங்களில் அந்தக் கோயிலுக்குவந்து சேர்வதுண்டு. முன்னே அவர்கள் சீனதேசத்தரசன் ஆளுகையிலிருந்து 1864-ம்ஞ முதல் சுவாதீனமாய் தங்களுக்குள் ஒருவனை அரசனாய் நியமித்துக்கொண்டு அவனுக்கு வருஷாந்தரத்தில் ஆடு ஒட்டகம் முதலியவைகளை வரியாகச் செலுத்திவருகிறார்கள். அத்தேசத்தில் வயதுசென்ற கிழவி அரசியாயிருப்பது வழக்கம். அவள் தலைமயிரெல்லாம் இடைவிடாமல் ரத்தினாபரணங்கள் முடித்து ஒரு பெருஞ்சுமையாகத் தொங்கும். அவள் நடக்கும்போதெல்லாம் இரண்டு புருஷர்கள் அம்மயிர் மூட்டையைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு பின்செல்லுவார்கள். அத்தேசத்தில் இப்பொழுது உருஷியர் பிரவேசித்துவிட்டார்கள்.

அத்தேசத்திலிருக்கிற தார்த்தாரியர்கள் வேளாண்மைசெய்து ஜீவிப்பவர்கள். அவர்கள் ராஜாங்கத்தினின்றும் பயிர்த்தொழிலுக்கு உபயோகமான சில கிராமங்களை வாங்கிக்கொண்டு பண்படுத்திப் பயிர்செய்து அரசனுக்கு வருஷாந்தவரி கட்டுவதுண்டு. யுத்தகாலங்களில் அந்த வரி அதிகமாய் வாங்கப்படும். ஆயினும் ஜங்கேரியா தேசத்திற்குள் தார்த்தாரியர்களே செல்வவான்கள். பயிர் செய்வதில் விசேஷ ஊக்கமும் விடாமுயற்சியும் நீர்வளமுண்டாக்குகிற திறமையும் அவர்களிடத்தில் ஒப்பற்றிருப்பதால் அவ்வளவு செல்வக்குடிகளாயிருக்கிறார்கள். அவர்கள் மிகவும் பலிஷ்டர்கள்; எவ்வகையான வருத்தத்திற்கும் சலிக்கிறதில்லை. காற்றுமழை வெ

யில்களில் திரியப் பின்வாங்குவதில்லை. அவர்களுடைய சரீரக்கட்டைப்பார்த்தால் தேசாந்தரயாத்திரை செய்வதற்கே பிறந்தவர்போல் தோன்றும். அநேகம் வனாந்தரங்களைக்கடந்து அரபிதேசத்தில் மஹம்மதுவின் பிறப்பிடமான மெக்காவையும் மெதீனாவிலிருக்கிற அவர் கோரியையும் தங்கள் வாழ்நாளில் ஒரு தடவை போய்ப் பாராவிடின் தங்கள் ஜன்மம் சபலமாவதில்லையென்று அதற்காக அநேகர் யாத்திரைசெய்வதுண்டு. அவர்கள் யாத்திரையைப்பார்த்தால் வெகு விநோதமாயிருக்கும். அங்கே வனாந்தரக்கப்பல் என்று பேர்பெற்ற பெரிய ஒட்டகங்களின்மேல் கூடாரத்திற்குவேண்டிய சாமான்கள், தட்டுமுட்டு, மற்றும் வேண்டியபொருள்கள் யாவையும், தங்கள் பெண்டுபிள்ளைகளையும் ஏற்றிக்கொண்டு யாத்திரைபண்ணுவார்கள். அந்தப் புதுமையை நமது பத்திரிகையைப் பார்ப்பவர் இச்சஞ்சிகையுடன் சேர்த்திருக்கும் படத்தில் விளக்கமாய்க் காணலாம்.

தக்காணத்துப் பூர்வகதைகள்.

(மந்திரவாதி.)

முன்னொருகாலத்தில் அரசனொருவன் ராஜ்யபரிபாலனஞ் செய்துகொண்டிருந்தான். அவனுக்கு அதிரூபவதிகளாய் ஏழுபெண்களுண்டு. அவர்களெல்லாரும் நற்குண நன்னடக்கையுடையவர்கள். அவர்களுள் சிங்காரமென்கிற கடைசிப்பெண்மாத்திரம் மற்றவர்களைவிட அதிகமாய்ச் சமத்தும் சாதுரியமுமுள்ளவள். அவ்வரசன்மனைவி இப்பெண்களின் சிறுவயதிலேயே இறந்துபோனதனால் அப்பெண்கள் தாயில்லாப் பெண்களாகவே வளர்ந்துவந்தார்கள்.

தங்கள் தாய் இறந்துபோனபிறகு அந்தப் பெண்கள் நாளொன்றுக்கு ஒருத்தி வீதம் முறைபோட்டுக்கொண்டு தந்தைக்குச் சாப்பாடுசமைத்து வேளையில் அன்னமிட்டுக்கொண்டுவந்தார்கள். அவர்கள் தகப்பனும் ராஜாங்கத்துவேலைகளைச் சீராய்ப் பார்த்து வந்தான்.

இப்படியிருக்கையில் அவ்வரசன் பிரதானமந்திரி இறந்துபோனான். அவனுக்கு ஒரு பெண்ணுண்டு; கைம்பெண்ணான அவன் மனையாள் இவ்வரசனுடையபெண்கள் சமைத்துக்கொண்டிருக்கும்போது தினந்தப்பாமல் தன் மகளோடுகூடக் கொஞ்சம் நெருப்பு இரக்கவருவாள். அவள் வரும்போதெல்லாம் கடைசிப்பெண்ணான

சிங்காரம்: "அவளை நமதுவீட்டுக்கு வரவொட்டவேண்டாம்; வெளியேபோகச்சொல்லுங்கள். அவள் தன்வீட்டிலேயே நெருப்பு தேடிக்கொள்ளட்டுமே; ஏன் நம்மண்டை வந்து இரக்கிறாள்? அவள் இவ்வாறு நமது வீட்டுக்கு வரும்படி நாம் இடங்கொடுத்திருந்தால் நமக்கு என்றைக்கு ஆவது தீங்கு சம்பவிக்குமேயன்றி வீண்போகாது" என்று தடுத்துக்கொண்டேயிருப்பாள். அதற்கு மற்றப்பெண்கள்: "குழந்தாய் சிங்காரம்! சும்மாவிரு; ஏன் நீ எப்போதும் இந்த அநாதைப்பெண்ணோடு வாதாடுகிறாய்? வேண்டுமானால் கொஞ்சம் நெருப்பு எடுத்துக்கொண்டுபோகட்டும்" என்று சொல்வார்கள். அதுகேட்டு அந்தக் கைம்பெண், அடுப்பண்டைசென்று கொஞ்சம் கட்டையும் நெருப்பும் எடுத்துக்கொண்டுபோவாள். அவள் இன்னும் என்னசெய்துகொண்டுவந்தாள் தெரியுமா? தான் அடுப்பண்டைபோகையில் ஒருவருமில்லாமற் பார்த்து அங்கே பதார்த்தங்கள் பக்குவஞ்செய்து வைத்திருக்கிற பாத்திரங்களில் தப்பாமல் கொஞ்சம் மண்ணையெடுத்துப் போட்டுவந்தாள்.

அந்த அரசன் தன் மக்களை அதிக அபிமானமாய்ப் பாதுகாத்துவந்தான். அப்பெண்களும் தங்கள் தாய் இறந்ததுமுதல் தகப்பனார்க்கு யாராவது விரோதிகள் விஷங்கொடுத்துக் கெடுதி விளைக்கப்போகிறார்களென்று பரிவோடு தங்கள் கையினாலேயே அன்னம் சமைத்திட்டுக்கொண்டுவந்தார்கள். அதனால், அவன் தன் உணவுகளில் மண்கலந்திருப்பதுகண்டு, 'இது வேறொருவரும் கொண்டுவந்துபோட்டு வைக்கவழியில்லை. இப்பெண்களுடைய அஜாக்கிரதையினாலேதான் வந்திருக்கவேண்டும்' என்று நினைத்தானாயினும், தன் பெண்களிடத்தில் அதிக அன்புள்ளவனாகையால் அதைப்பற்றி அவர்களைக் கண்டிப்பதற்கு அவனுக்கு இஷ்டமில்லாமலிருந்தது. அப்படி நாள்தோறும் அவன் தன் போஜனத்தில் மண்கலந்திருக்கக் கண்டுகொண்டேவந்தான்.

ஒருநாள் அவ்வரசன்: "இப்படி நாள்தப்பாமல் நமது சோற்றில் மண் ஏன் வருகிறதோ? இப்பெண்கள் சமைப்பதைக் கண்டறிவோம்" என்று சமையல் வீட்டுப்பக்கத்தறையிலிருந்து ஒரு சாளரத்தின்வழியாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அவ்வேழுபெண்களும் மிகவும் கவனமாய்ப் பாத்திரங்களையெல்லாம் சுத்திசெய்து சீராய்ச் சமைத்துவைத்தார்கள். இப்படியிருக்க, அந்தக் கைம்பெண் வழக்கம்போலவே நெருப்பிரக்கவந்தாள். அவளைக்கண்டு சிங்காரம் கோபித்து: "உன் வீட்டிலேயே நீ விறகு ஏன் வாங்கிவைத்துக்கொள்ளக்கூடாது? தினந்தோறும் எங்கள் வீட்டில்வந்து வாங்கிப்போவானேன்? ஓ என் சோதரிகளே! ஒருவரும் இவளுக்கு விறகுகொடுக்கவேண்டாம்; அவள் போய் விலைக்குவாங்கிக்கொள்ளட்டும்" என்றாள். அதற்குப் பெ

ரியபெண்: "அம்மா சிங்காரம்! இந்த ஏழைப்பெண் கொஞ்சம் விற கும் நெருப்பும் வாங்கிக்கொண்டுபோவதனால் நமக்கு என்னகுறை ந்துபோகிறது. அவள் நமக்கு என்னகெடுதி செய்கிறாள்" என்று சொல்லக்கேட்டு, "நீ அப்படியா நினைக்கிறாய்? அவள் எப்போதும் இங்கே வந்துகொண்டிருக்க நாம் சம்மதித்திருந்தோமானால் எப் போதாவது நமக்குக் கெடுதிசெய்து வருத்தப்படுத்துவாள்" என்று சொன்னாள்.

இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அரசன், பிறகு அந்த மந்திரியின் மனைவி உள்ளே சென்று கொஞ்சம் கட்டையும் விறகும் எடுத்துக்கொண்டு பக்கத்தில் சமைத்த பதார்த்தங்கள் வை த்திருந்த பாத்திரங்களில் ஒன்றுதப்பாமல் மண்ணைப் போட்டுவிட் டுப்போகவும் கண்டான். இதைப்பார்க்கவே அரசன் மிகவுங் கோ பங்கொண்டு அவளைப் பிடித்துவரச்சொல்லி, நீ என்னகாரியஞ் செய்தாயென்று கேட்டதற்கு, அவள்: தங்களுடைய தயவு பெற்றுத் தங்களுக்கு மனையாளாகவேண்டுமென்றே இந்தச் சூது செய்தேனென்று அவனுக்கு ஆசைபெருகும்படி இனிப்பாய்ப் பற்பல பேச்சுகள்பேசி அவனைக் களிக்கச்செய்தாள். இவ்வள வும் அவள் மோசமாய்ப் பேசினபேச்சேயன்றி வேறல்ல. அந்த வார்த்தைகளைக் கேட்கவே, அவளைத் தண்டிக்கவேண்டுமென்று நினை த்திருந்த அரசன் உடனே அவளை விவாகஞ்செய்து ராணியாய் வைத்துக்கொண்டான். அவளும் தன் பெண்ணோடுகூட அரண் மனைக்கு வந்து சேர்ந்தாள்.

அதுமுதல் அந்தப் புதுராணி அவ்வேழுபெண்களையும் கண் ணில் காணவொட்டாமல் பலவிதமாய்ப் பகைத்தாள். அவர்களுக் குப் பதில் தன்மகளே அரண்மனையில் ராஜாத்தியாயிருக்கவேண் டுமென்றும், அவ்வரசன் பொருள்களெல்லாம் தன் மகளுக்கே சேர வேண்டுமென்றும் எண்ணி தன்னால் கூடியவளவு அவர்களுக்குக் கெடுதிசெய்ய நினைத்தாள். முன் அவர்கள் தனக்குச்செய்த உத விக்காக இப்போது அவள் அப்பெண்களிடத்தில் எவ்வளவு நன்றி பாராட்டவேண்டும்! அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்குத் தீங்கு செய்யக்கருதினாள். சோறாவது வயிறுநிரம்பப் போடுவளோ? கிடை யாது. குடிக்கத்தண்ணீர்கொடுப்பாளோ? ஐயோ! அந்தப் பெண் களுக்கு என்ன துரதிஷ்டமுண்டாயிற்று பார்த்தீர்களா? இது வரையில் அவர்கள் தங்களிஷ்டப்படி நல்ல நல்ல உணவுகளெல் லாம் உண்டு, உயர்ந்த உடுப்புகளெல்லாம் உடுத்துச் சுகமாயிருந் ததனால் இந்தச் சங்கடத்தை அனுபவிக்கமாட்டாமல் நாள்தோறும் தங்கள் தாயைப் புதைத்திருக்கும் இடத்திற்போய் உட்கார்ந்து கொண்டு அழுவார்கள். "ஓ எங்கள் அருமைத்தாயே! இந்த அநா தைப்பெண்களைக் கண்ணெடுத்துப்பார்க்கமாட்டையா? நாங்களெ

ன்ன துரதிஷ்டத்துக்காளானோம்! இந்த வைப்பாட்டித்தாய் எங்களுக்குச் சோறுகூடப்போடாமல் கொல்லுகிறாளே!" என்று அழுது புலம்புவார்கள்.

இவ்வாறு ஒருநாள் அந்தப்பெண்கள் புலம்பிக்கொண்டிருக்கையில் அவர்கள் தாயைப் புதைத்திருந்த கல்லறையினின்றும் அழகான மாமரமொன்று முளைத்தது. அம்மரத்தில் அதிமதுரமான பழங்கள் குலுங்கிக்கொண்டிருந்தன. இந்த எளியபெண்கள் அப்பழங்களை வயிறுநிரம்பப் புசித்துப் பசியாறினார்கள். அன்று முதல் தங்கள் சிற்றம்மையண்டைபோய்க் கால்வயிறுகஞ்சி இரப்பதைவிட, இப்பழத்தைப் புசிப்பதே மேலானதென்று தினந்தோறும் அங்கேபோய் அப்பழங்களையே புசித்துவந்தார்கள். அதுகண்டு அந்தப் புதுராணி தன் மகளையழைத்து: "குழந்தாய்! இதென்ன அதிசயமோ எனக்குத் தெரியவில்லை. அந்த ஏழு பெண்களும் எப்போதும் தங்களுக்குச் சாப்பாடேவேண்டாமென்கிறார்கள். ஏதாவது கொடுத்தாலும் உண்ணுவதில்லை. அப்படியிருந்தும், அவர்களுக்கு உடம்பில் நோய்நொடியொன்றையும் காணோம். நாளுக்குநாள் மேனியுண்டாகிறது; உன்னைவிட அவர்கள் நன்றாயிருக்கிறார்கள். இந்தப்புதுமையை நான் என்னவென்று சொல்லுகிறது? நீ அவர்கள்மேலே கவனமாய் யாராவது ஏதாயினும் கொடுக்கிறார்களா? எனக்குத் தெரிந்துசொல்" என்று வேண்டினாள்.

மறுநாள் அப்பெண்களெல்லாம் அந்தக் கல்லறையண்டைபோய் மாம்பழம் தின்பதுகண்டு, அந்த ராணியின் பெண்ணும் அங்கே சென்றாள். அந்தப்பெண்ணைப்பார்த்து சிங்காரம்: "சோதரிகாள்! அதோ அந்தப்பெண்வந்து நிற்கிறாள் பார்த்தீர்களா? அதைத் துரத்திவிடுவோம், அல்லது நமது பழங்களையாவது மறைத்துக்கொள்வோம். இல்லாவிட்டால் இச்செய்தியெல்லாம் தன் தாய்க்குத் தெரியப்படுத்துவாள், அதுகேட்டு அவள் இன்னும் தீங்குசெய்ய நினைப்பாள்" என்று சொன்னாள். அதற்குப் பெரியபெண்கள்: "அப்படியன்று, நாம் இரக்கமற்றிருக்கக்கூடுமா? இவள் அவ்வளவு கொடியபெண் அன்று. இங்கே அழைத்துக் கொஞ்சம் பழங்கொடுப்போம்" என்று சொல்லி அச்சிறுக்கியை அழைத்து அவளுக்கு ஒருபழம் கொடுத்தார்கள்.

அந்தப்பெண் அப்பழத்தைத் தின்றதுந் தின்னாததுமாய்த் தாயண்டையோடி: "அம்மா! நீ சமைத்துவைத்திருக்கிற சாப்பாட்டை அப்பெண்கள் வேண்டவில்லையென்பது எனக்கு அதிசயமாய்த் தோன்றவில்லை. அவர்கள் தாயைப்புதைத்த கல்லறையின்மேல் மதுரமான கனிகள்நிறைந்த மரமொன்றிருக்கிறது. அதன் கனிகளையே புசித்துவருகிறார்கள். எனக்கும் ஒன்று கொடுத்

தார்கள். 'தின்றுபார்த்தேன்; அவ்வளவு உருசி நானெங்குங் கண்டதில்லை'' என்று சொன்னாள்.

அதைக்கேட்கவே எரிகிறவுடம்பில் எண்ணெயைக் காய்ச்சி ஊற்றினதுபோல் முன்னிலும் அதிகமாய் மனத்துயரமடைந்து மறு நாளெல்லாம் எழுந்திராமல் தனக்குத் தீராத்தலைநோயுண்டாயிருப்பதாய் அரசற்குத் தெரிவித்தாள். அதைக்கேட்கவே அரசன் துக்கசாகரத்தில் மூழ்கி: "உன் தலைநோய்தீர என்னை என்னசெய்யச் சொன்னாலும் செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்று சொன்னான். அவள் என் தலைநோய்தீர ஒரே மருந்துதானுண்டு; இறந்துபோன உம்முடைய மனையாளைப்புதைத்த கல்லறையில் மாமரமொன்று முளைத்திருக்கிறது. அதை வேரோடு பிடுங்கிக்கொண்டுவந்து தழை வேர் எல்லாவற்றையும் நறுக்கிப்போட்டுச் சமைத்து, அந்தத் தண்ணீரை என் முகத்திற் கொஞ்சம்பூசினால் இந்தத் தலைநோய் நீங்கிப்போம்'' என்றாள். அரசன் உடனே சேவகர்களைத் துரத்தி அம்மரத்தைப் பிடுங்கிவரச்சொல்லி, அதை நறுக்கிப்போட்டுக் காய்ச்சின தண்ணீரை அவள்முகத்தில் பூசினான். அவளுந் தலை வலி போய்விட்டதென்று சந்தோஷமாய் எழுந்தாள்.

மறுநாள் அந்த ஏழுபெண்களும் வழக்கப்படி அவ்விடத்தில் போய்ப்பார்க்கையில், அங்கிருந்த மாமரத்தைக் காணுமல் முன்னிலும் அதிக தீனமாய்ப் புலம்பத்தொடங்கினார்கள். அந்தக் கல்லறைக்குச் சமீபத்தில் சிறிய குளமொன்றுண்டு. இந்தப்பெண்கள் அழுதுகொண்டிருக்கையில், அந்தக்குளத்தில் சிறந்த பாலாடைக்கட்டிபோன்ற ஒருவகைப் பணியாரங்கள் நிறைந்திருக்கக்கண்டு வெகு சந்தோஷமடைந்து அதைப் போய்ப் புசித்து திருப்தியடைந்தார்கள். அப்படியே அநேகநாள் சென்றன. அவர்கள்போய் பார்க்கும்போதெல்லாம் அந்தக்குளம் நிறைந்தேயிருக்கும். இப்படி ஏழுபெண்களும் கொஞ்சநாள் சந்துஷ்டியடைந்திருப்பது கண்டு அந்தக் கொடிய ராணி முன்போலவே தன் மகளைக் கூவி, "அம்மா! இந்தப் புதுமையை நானென்னசொல்வேன்! அந்த மாமரத்தைத்தான் முன்னமே பிடுங்கிப்போடச் சொன்னேமே. இப்பெண்கள் வீட்டிலும் உணவெடுக்கிறதில்லை; அப்படியிருந்தும் அவர்களுக்கு உடம்பு சிறிதும் வாடவில்லை, மனதிலும் வியாகுலப்படக்காணேம். இதென்ன அதிசயமோ எனக்குத் தெரியவில்லை'' என்று சொல்ல, அந்தச் சிறுக்கி, அதை நான் பூராயமாய்ப் பார்த்துச் சொல்லுகிறேனென்றாள்.

மறுதினம் அவ்வேழுபெண்களும் போய் அந்தப் பணியாரத்தைப் புசித்துக்கொண்டிருக்கையில் எவள் வந்துநிற்பாள்? அந்தத் தீசற்சிறுக்கித் தான் வந்துநின்றாள். சிங்காரம் அதைக்கண்டு: "இதோபார்த்தீர்களா? அந்தப்பெண் மறுபடியும் வருகின்றாள். அவள் வந்து இதைப் பாராதபடி கரைமேல் சுற்றி உட்கார்வோம்.

அதின் கையிற் சிறிதுகொடுப்போமானால் உடனே இச்செய்தியைத் தன் தாயண்டை தெரிவிக்கும், அதனால் நமக்கு மிகவும் கெடுதியுண்டாகும்" என்று சொல்ல, மற்றவர்கள்: இவள் வீணான சந்தேகங்கொள்ளுகிறாளென்று எண்ணி, அவள்சொன்ன நற்புத்தியைக் கேளாமல் தாங்கள் உணவில் கொஞ்சம் அப்பெண்கையிற் கொடுத்தார்கள். அந்தப்பெண் அதைத்தின்று ஓடிப்போய் இச்செய்தியெல்லாந் தன் மாதாவுடன் சொல்லினாள். (இன்னும் வரும்.)

உடைகளை வலித்துஉடுப்பதின் தீமை.

உடைகளை வலித்து உடுத்துவதால் அநேகந் தீமைகளுண்டாகின்றன. முன் ஒரு சிறுபெண் தன் உடையை இழுத்து உடுத்தால் இடைசிறுத்து அழகாயிருக்குமென்று நினைத்துத் தன்னைத்தானே கொலைசெய்துகொண்டாளென்று ஒரு செய்தி கேள்வியுற்றிருக்கிறோம். சீனதேசத்துப்பெண்கள் வேண்டுமென்று தங்கள் கால்களை வாலிபத்திலேயே கச்சைபோட்டிறுக்கிக்கட்டிச் சூம்பி வெளுத்துப்போம்படி செய்கிறார்கள். அது தங்கள் தேசாசாரமென்று அவ்வாறு செய்துகொண்டு பின்பு நடக்கத் திறமையற்று அல்லாடக்கண்டிருக்கிறோம். ஆயினும் அது அவ்வளவாய்க் கெடுதி விளைக்கத்தக்கதன்று. ஐரோப்பியர்கள் உடம்பெல்லாம் உடுப்புகள்போட்டு வலித்துக்கட்டுகிறார்கள். அதனால் சரீரத்துள் பிரதான உறுப்பான இருதயத்திற்குச் சேதமுண்டாகின்றது. அவர்களுடைய உடை ஐரோப்பாமுதலிய சீததேசங்களுக்கு அனுகூலமாயிருந்தாலும், அது உஷ்ணமான நமது தேசத்துக்கு ஒருபோதும் ஒவ்வாது. இத்தேசத்தில் வந்து பழகின ஐரோப்பியர்களே தங்கள் தேசாசாரம் இத்தேசத்திற்கு ஒத்திருக்கவில்லையென்றும், தேகத்தில் வேர்வைநீர் தங்கவொட்டாமல் தேஹமெல்லாம் காற்றுடும்படி விலத்தியாயுடுக்கிற ஹிந்துக்களுடையமாதிரியே நல்லதென்றும், தேசாசாரத்தை விடக்கூடாமையால் தங்களுக்குக் கெடுதிசம்பவிக்கிறதென்றும் வருந்திக் குறைகூறக் கேட்டிருக்கிறோம். அப்படியிருக்க, நமது வாலிபர்கள் ஐரோப்பியர்களுடைய மாதிரியே சிறந்ததென்றெண்ணி அம்மாதிரியுடுப்புகள் உடுப்பதுமல்லாமல், தேகத்திற்குப் போதும்போதாததுமாய் வலித்துக்கட்டினால் அழகென்று அவ்வாறு செய்துவருகிறார்கள். இதென்ன புத்தியீனம் பாருங்கள்!

சென்ற பிப்ருவரிமாசச் சஞ்சிகையில் காட்டியிருக்கிற தேஹத்தின் உட்புறத்துப் படத்தைப்பார்த்தால் நமது இருதயமும் சுவா

ஸாசயமும் அமைத்திருக்கின்றவிதமும், அவைகளைப் பத்திரமாய் மூடியிருக்கிறவிதமும், அவை நன்ருய் அசைவதற்கு வேண்டு மானவிடம் அமைத்திருக்கிறவிதமும் நமக்கு நன்ருய்த் தெரிய வரும். எப்போதும் ஓய்வற்று அடித்துக்கொண்டிருக்கிற இருதய மானது தனக்கு மேற்போர்வையாயிருக்கிற மெதுவான பைக்குள் ளே இருந்து இரண்டுபக்கங்களிலுமிருக்கிற சுவாஸாசயங்களுக்கு மத்தியில் தொங்கிக்கொண்டிருக்கிறது. ஆயினும் அந்த இருதயத் துள் ரத்தம் வரும்போதும் வெளியே போம்போதும் ரத்தப்பை பெருக்கவும் சுருங்கவும் போதுமான இடமிருக்கின்றது. அப்படி யே நமது ரத்தம் சுத்தமாம்படி சுவாஸவாயுவை ஏற்றுக்கொள்ள வும் வெளிவிடவும் அனுகூலமாய் சுவாஸாசயம் பருத்துக்கொண் டும் சுருங்கிக்கொண்டுமிருப்பதற்குப் போதுமானவிடமுமிருக் கின்றது.

இருதயத்தைக் கொஞ்சம் அழுத்தினல் அதன் அசைவு நின்று போம். சுவாஸாசயத்தைக் கொஞ்சம் அழுத்தினல் அதிலுள்ள சில ரந்திரங்கள் அடைந்துபோய் வேண்டுமளவு காற்றை உட் கொள்ளாமற்போம்.



மார்பெலும்பு.

இந்த நுட்பமான அவயவங்களுக்கு யாதொரு அபாயமும் வராதபடி எலும்புகளாலாகிய மூடியொன்று அதைக் கவர்ந்து கொண்டிருக்கின்றது. கொஞ்சமும் இடைவெளியில்லாமல் வட்ட மாய் அதைச் சூழ்ந்துகொண்டிருக்கின்ற மெதுவான விலாவெலும் புகள்மேலும் கீழும் அசையும்படியான வல்லமையுடையவைகளா யிருக்கின்றன. அதனல் இருதயமும் சுவாஸாசயங்களும் பருக்

கும்போது எலும்புகளால் அழுத்தப்படாமலிருக்கும்படி வெளி யுண்டாகின்றது.

இப்படி நமக்குப் பிராணுதாரமான அவயவங்களுக்கு யாதொரு தீங்குமுண்டாகாதபடி அவை எவ்வளவு சொல்பவிடத்தில் பத்திரமாய்க் காக்கப்பட்டிருக்கின்றன பாருங்கள். அப்படியிருக்க விலாவெலும்புகள் கூட முறிந்துபோம்படி கச்சுப்பட்டைகளாலும் உரத்த துணிமுதலியவைகளாலும் மேலே வலித்துக்கட்டுவது எத்தன்மையாயிருக்கின்றது?

இத்தன்மையான கெட்டவழக்கங்களால் உண்டாகுந் தீமைகளை நாம் எளிதில் அறிந்துகொள்ளலாம். எப்போதும் மேலே அழுத்திக்கொண்டிருந்தால் சுவாஸப்பை சுருங்கிப் பலவீனப்பட்டுப்போமல்லவா? அதனுல் ரத்தத்தைச் சுத்திசெய்வதற்குப் போதுமான நல்லகாற்றை உட்கொள்ள இடமுண்டாகிறதில்லை. ரத்தம் சுத்தமாகாமல்போனுல் கெட்டரத்தம் பரவி தேஹத்திற்குப் போஷணமும் வலிமையும் எப்படியுண்டாகும்? இவ்வாறு சவுக்கியம் குறைவுபடுமானுல் நோய் தனக்குத்தானே உண்டாகத் தலைப்படுகின்றது. சீதளதோஷம்முதலியவைகளால் நோயுண்டாவதும் இப்படியே. ஆயினும் வலியவர்களுக்கு முதலில் அவைகளின் கெடுதி அதிகமாய்த் தெரிகிறதில்லை. கடைசியில் க்ஷயம் முதலான ரோகங்களையுண்டாக்குகின்றன.

காற்றுக்குச் சிறிதும் இடமில்லாத ஒரு சிற்றறையில் நம்மைப் பூட்டிவைத்தால் உட்கொள்ள நல்லகாற்றில்லாமல் நாம் எவ்வளவு வருத்தப்படுவோம்? நம்மை அவ்வாறு செய்பவர்களிடத்தில் நமக்கு எவ்வளவு வெறுப்புத்தோன்றும்? நமது சுவாஸாசயத்தில் வேண்டுமளவு காற்றுபோயடையவும் தேஹமெங்கும் ரத்தம் தடையில்லாமல் பரவவும் இடமில்லாமல் தேஹத்தை இறுக்கிக் கட்டிப்போடுவதும் அதற்குச் சமானந்தான். அப்படிச் செய்வதனுல் சுலபமாய் மூச்சுவிடக்கூடாமல் நாம் எவ்வளவு வருத்தப்படுகிறோம்.

சரீரத்துள் இருக்கிற அவயவங்களெல்லாம் நசுங்கிப்போகாதபடி தளர்ச்சியாய் உடைகள் உடுப்பதைவிடச் சவுக்கியமானது வேறொன்றுமில்லை. அத்தன்மையான உடுப்புகள் குளிர்காலத்தில் உஷ்ணமாயும் உஷ்ணகாலத்தில் குளிர்ச்சியாயுமிருந்து நமக்கு வெகு சவுக்கியமுண்டாக்கும். நமக்கு இயற்கையாய்க் கடவுள் அளித்திருக்கிற உறுப்புகளை அழுத்தி உடைகள் உடுப்பதைவிட, அவைகட்கேற்றபடி உடுப்புகள் உடுப்பதே மிக்க அனுகூலமானதென்றும் அழகானதென்றும் விவேகிகளான பிள்ளைகள் தாங்களே தெரிந்துகொள்ளலாம்.

ஐரோப்பியர்களுள் அநேகம் பெண்கள் தங்கள் இடை சிறுத்திருக்கவேண்டுமென்று அரையை இழுத்து வலிமையாய்க் கட்டுகிறார்கள். அதனுல் உண்டாகுந் தீமைகளும் இப்படிப்பட்டவைதாம்.

அக்பர் சமஸ்தானத்தின் சிறப்பு.

நிலத்தையெல்லாம் நன்ருக அளவுசெய்து அக்பர்பாதுஷா வரியேற்படுத்தினர். அந்த வரி ஒரு ஹிந்து அரசரால் முதலில் உண்டாக்கப்பட்டது. அதை அபுல்பேஜில் என்கிற பண்டிதர் தாம் எழுதிய சரித்திரத்தில் விவரமாக எழுதியிருக்கிருர். அக்பர்பாதுஷா ஏற்படுத்திய நிலவரிக்கு மூன்று பிரயோஜனமுண்டு. முதலாவது: நிலத்தின் விஸ்தீரணத்தைத் தெரிந்துகொள்வது. இரண்டாவது: ஒவ்வொரு நிலத்தின் சாகுபடியை இவ்வளவென்று கணக்கிட்டு வரியேற்படுத்துகிறது. மூன்ருவது: இவ்வளவு பணம் இவ்வளவு தானியத்துக்குச் சமானமென்று நிதானிப்பது. இந்த ஏற்பாட்டைமுன்னிட்டு நிலத்தை முற்றும் அளந்து அதின் விஸ்தீரணத்தைக் கண்டுகொண்டார்கள். சாகுபடியையும் இவ்வளவென்று ஏற்படுத்தினர்கள். நிலத்தினுடைய வளத்தையும் மற்ற சௌக்கியத்தையும் கவனித்தார்கள். நிலத்தைத் தோல்வாரிஞல் அளந்தால் அந்த வார் நீளவும் குறுகவும் கூடியதானதால் அளவு திருத்தமாக ஏற்படாதென்று அதற்குப் பிரதியாக இருப்புச் சங்கிலியால் அளந்தார்கள்.

சாகுபடியில் மூன்றில் ஒருபாகம் வரியாக ஏற்பட்டது. அது அதிகமென்று காணப்பட்டால் ஒவ்வொரு குடியானவனும் நிலத்தை அளக்கச் சொல்லி மாகுலேயும் பாகித்துக்கொடுக்கக்கூடும். முதலில் வருஷத்துக்கு ஒருதரம் வரியேற்படுத்தினர்கள். பின்பு பத்துவருஷத்துக்கு ஒருதரம் மாற்றினர்கள். உத்தியோகஸ்தர்களுக்குப் போட்டிருந்த வரிகளையெல்லாம் நீக்கினர்கள்.

அக்பர்பாதுஷாகாலத்தில் தரகர்களை நீக்கிவிட்டார்கள். தானியங்கள் மேல் போட்டிருந்த வரிகளையெல்லாம் பாதுஷா அடியோடு எடுத்துவிட்டார். அவர் பட்டத்துக்குவந்த பதினேழாம் ஆண்டில் எண்ணெய், உப்பு, சர்க்கரை, வாசனேத்திரவியம், செப்புப்பாத்திரம், நார்ப்பட்டு, கம்பளம், விறகு, புல்முதலானவைகளுக்குப் போட்டிருந்த வரியை எடுத்துவிட்டார். குடியானவர்களுக்கு இன்றியமையாத சாமான்களுக்கு வரியில்லை. தனவான்களுக்கு உபயோகப்படுகிற பொருள்களுக்குமாத்திரம் தீர்வை யேற்பட்டது. யானை, குதிரை, ஒட்டகம், பட்டு, ஆயுதம், செம்மறியாடு, வெள்ளாடு முதலியவற்றிற்குத் தீர்வை நூற்றுக்கொன்றுவீதம். அக்காலத்தில் உப்புவரி சாராயவரி முதலிய வரிகள் கிடையாது, அபினிவரியும் இல்லை.

ஆதிகாலத்தில் குடிகள் ஆறில் ஒருகடமை அரசனுக்குச் செலுத்திவந்தார்கள். ஆப்கான்தேசத்து ஷியர் என்பவர் அதை நாலிலொருகடமை

யாக்கினர். அக்பர்பாதுஷா அதை மூன்றிலொன்றாக்கினர். அவர்போட்ட நிலவரி முன்னிருந்ததைவிட அதிகமாயினும், அதை நன்றாக நடத்திவந்தபடியால் குடிகளுக்கு அதினால் குறைவில்லையென்று அபுல்பேஜல் சொல்லியிருக்கிறார். மற்ற அநேகவரிகளை எடுத்துவிட்டபடியால் பேரிஜ் குறைந்துவிட்டது. வரிகளை வாங்குவதற்குச் செல்லும் செலவும் அவ்வாறே குறைந்தது. ராஜ்யத்தின் வரும்படி சற்றேறக்குறைய ஒரேயளவாயிருக்கக் குடிகளுடைய சௌக்கியம் அதிகரித்தது.

முற்காலத்தில் நிலவரியை குடிகளும் ஜமீன்தாரும் பங்கிட்டுக்கொண்டிருந்தார்கள். குடிகள் தங்களுடைய உழைப்புக்குத்தகுந்ததை எடுத்துக்கொண்டு மற்றதை ஜமீன்தாருக்குக் கொடுத்துவிடுவார்கள். இந்துதேசத்தை மோகலாயர் கைப்பற்றியபோதும் அப்படியே நடந்துவந்தது. ஜமீன்தார்களுடைய பங்கைப் பிடுங்கிக்கொள்ளாமல் அதை நிலைநிறுத்தினார்கள். மோகலாயர் கொஞ்சமாயிருந்தபடியால் தாங்கள் கைப்பற்றிய தேசத்திலிருந்த ஜமீன்தார்களோடு சமாதானமாக வாழ்ந்திருக்கவேண்டியதாயிற்று. மோகலாயர் யாவரும் ஒருங்குசேர்ந்து வாசம்செய்தார்கள். எப்போதும் ஆயுதபாணிகளாயிருந்தார்கள். வெவ்வேறிடத்தில்போய் குடியேறியிருப்பார்களானால் எதிரிகள் அவர்களைஜெயித்துத் தேசத்தைவிட்டுத் துரத்திவிடுவார்கள். புதிதாக ஒரு மாகாணத்தைச்செய்தால் அதின் வரும்படியை முன்னனுபவித்த அரசனுக்கே கொடுத்துவரும்படி ஏற்பாடுசெய்வார்கள். அக்பர்பாதுஷாவினுடைய ராஜ்யம் அங்கிலேயருடைய ராஜ்யத்தைப்பார்க்கிலும் சிறிதாயினும் அவருடைய வரும்படி அதிகமாகவும் வரிகள் குறைவாகவும் இருந்தன.

அவர் ஏற்படுத்திய நிலவரியில் பிசகுகள் இருந்தபோதிலும் அவருடைய அரசாக்ஷியில் ஐம்பதுவருஷகாலத்தில் குடிகளுக்குள் பின்சௌக்கியம் மிகுதியாயிருந்தது. அங்கிலேயர் அரசாக்ஷியின் முதல் நூறுவருஷத்தில் அவ்வளவும் நன்மையில்லை. அக்பர்காலத்தில் நிலவரி இருபத்தைந்துகோடி ரூபாய். அங்கிலேயர் அரசாக்ஷியில் இருபத்தொருகோடி. அக்பர் ஏற்படுத்திய தீர்வை நூற்றில் முப்பத்துமூன்றுக்குமேலில்லை. அங்கிலேயர் துரைத்தனத்தில் நூற்றில் அறுபதுக்குமேலாகின்றது. அக்பருடைய வரும்படியெல்லாம் இத்தேசத்திலேயே செலவாய்விட்டது. அங்கிலேயர் அரசாக்ஷியில் அஞ்சுகோடி ரூபாய். வெளித்தேசத்துக்குப் போய்விடுகின்றது.

அக்பர்பாதுஷாவின் காலத்தில் கிராமங்களிலிருந்து சாகுபடிகணக்குகளும் மற்றநேகவிதமான கணக்குகளும் வந்துகொண்டிருந்தன. தேசத்தின் வாஸ்தவமான நிலைமையைத் தெரிந்துகொள்ளுவதற்காகவே மேற்படி கணக்குகள் ஏற்படுத்தப்பட்டன. குடிகளுக்குவேண்டியது இன்ன

தென்று தெரிந்துகொள்ளவும், அவர்களுடைய க்ஷேமத்தின்பொருட்டுச் செய்யவேண்டியகாரியங்களை அறியவும் அந்தக் கணக்குகள் உபயோகப் பட்டன. அவற்றால் குறைகள் நீங்கின; கொடுமை வெளிப்பட்டது. பீஜ் என்பவர் அக்பர்பாதுஷாவினுடைய காலத்தில் நடந்த விசேஷங்களைச் சரித்திரமாக எழுதிவரும்போது அவர் சகோதரராகிய அபுல்பேஜல் என் பவர் தேசமுழுமையும் வித்தியாசாலைகளை ஏற்படுத்தினர். அந்தச்சாலை களில் சுதேசத்தார்கள் புறத்தேசத்தாருடைய சரித்திரத்தையும் வித்தை யையும் படித்துவந்தார்கள். புறத்தேசத்தாருடைய புத்தகங்களை இந்து தேசத்துப்பாஷைகளில் மொழிபெயர்த்து ஜனங்களுக்குக் கற்றுக்கொடு த்தார்கள்.

அக்பர்பாதுஷாவினுடைய காலத்தில் அவர் ஏற்படுத்திய பாடசாலை களில் அவரவருக்கு வேண்டிய வித்தையைக் கற்றுக்கொண்டார்கள். அவர் மொகல் பாஷையைப் பிரதானமாகக்கொள்ளவில்லை. குடிகள் எல்லாரும் அரசனுடைய பாஷையைக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று அவர் உத் தரவுசெய்யவில்லை. அரசன் குடிகளுடைய பாஷையைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பது அவருடைய கோட்பாடு. ஜனங்களெல்லாரும் அவ ருடைய பாஷையைப் படித்துத்தான் நாகரீகமடையவேண்டுமென்று ஏற் பாடு செய்யவில்லை. ஜனங்கள் கிளிப்பிள்ளையைப்போல் பேசக் கற்றுக் கொள்ளுவதில் என்னபயன்? அவர்கள் சீர்திருத்தமடைந்து க்ஷேமமாக இருக்கவேண்டுமானல் அவர்களுடைய சொந்தமானபாஷையைக் கற்க வேண்டுமென்றும், அதுவன்றி வெளித்தேசத்தார் பாஷையை கற்பதில் விசேஷமான பயனில்லையென்றும் அக்பர்பாதுஷாவுக்கு நன்றாகத்தெரி யும்.

இப்போது நடக்கிறதைப்போல் அவர்காலத்தில் ஜனங்கள் பல வருஷம்போக லாயர்பாஷையை வாசிக்கவேண்டிய நிபந்தனையில்லை. பாரசீகதேசத்தார் சாகித்தியமும், அரபிதேசத்தார் சாத்திரமும், மற்றப் புறத்தேசத்தார் சமயாசாரநூல்களும் இந்துதேசத்துப் பற்பல பாஷை களில் மொழிபெயர்க்கப்பட்டன. இவ்வாறு குடிகள்யாவரும் பிரயா சையின்றி வாசித்தறிந்து நாகரீகமடைகிறதற்கு ஏதுவாயிற்று.

பாதுஷாவினுடைய ராஜாங்க நிர்வாகமும் அரியகுணங்களும் யாவ ராலும் புகழத்தகுந்தனவாயிருக்கின்றன. இவற்றைவிட ஆச்சரியப் படத்தக்க விஷேமானகுணம் அவரிடத்திலிருந்தது. மகமதியரெல்லா ரும் புறச்சமயங்களை வேரோடு களைந்து நாசஞ்செய்யவேண்டுமென்கிற கருத்துடையவர்கள். அக்பர்பாதுஷாவானவர் மகமதியராயினும் அவருக் குக் கீழ்ப்பட்ட குடிகளுடைய மதாசாரங்களைப்பற்றிக் கவனித்தவரே அல்ல. அவரவருக்கு இஷ்டமானமதத்தை அனுசரிக்கும்படி விட்டுவிட்

டார். இந்த தயாளகுணத்தினால் அவருக்குச் சர்வஜனரக்ஷகன் என்று ஜனங்கள் பெயரிட்டார்கள்.

அக்பர்பாதுஷாவானவர் சாதாரணமான மதங்களில் சேர்ந்தவரல்ல. கடவுள் ஒருவர் உண்டென்றும், அவரைத் துதிக்கவேண்டியது நம்முடைய கடமையென்றும் எண்ணியிருந்தார். அவருடைய தேசத்தாரைப்போல் அல்பமதபேதங்களில் தலையிடார். கடவுளை அறிவினாலறிந்து பூசை பண்ணவேண்டுமென்றும், எந்த வேதத்தையும் முற்றிலும் நம்பக்கூடாதென்றும் அவர் எண்ணம்கொண்டிருந்தார். ஹிந்துக்களென்றும் மகமதியர்களென்றும் பேதம்செய்யாமல் அவ்விருசமயத்தாருக்கும் உயர்ந்த உத்தியோகங்களைக் கொடுத்துவந்த அரசர் அவர் ஒருவரே. அவருக்கு முன்னிட்டு ஒருவரும் இருந்ததில்லை. இந்துக்களுக்கும் மகமதியருக்குமிருந்த பகையைமாற்றி அவர்களை ஒருமித்துச் சமாதானமாக வாழச்செய்து அப்படி ஐக்கியமான ஒருஜாதியாருக்குத்தான் அரசனாக இருக்கவேண்டுமென்று பாடுபட்டார். தான் எண்ணிய எண்ணம் நிறைவேறும்பொருட்டுக் கடவுள் ஒருவரே. தாம் அவருடைய தீர்க்கதரிசியென்றும் அந்தக் கொள்கையைப் பரவச்செய்தார்.

மகமதியருக்குள் பூஜை, விரதம், புண்ணியயாத்திரை, கோயில்தொழுதல் முதலியவையெல்லாம் அவரவர் இஷ்டப்படி நடத்தலாமென்று உத்தரவுசெய்தார். பன்றியிறைச்சியைப் புசிப்பவருக்குத் தண்டனையில்லையென்று விதித்தார். மிதமாகச் சாராயம்குடிக்கலாமென்றும், காலப்போக்குக்காகப் பாச்சிகையாடலாமென்றும், பன்னிரண்டாவது வயதுக்குமுன்பாக சின்னத்துக்கலியாணம் செய்யக்கூடாதென்றும் சட்டம் ஏற்படுத்தினார்.

இந்துக்களுள் பலிகொடுப்பதையும், கொடுமையான சத்தியம்செய்வதையும், சரியான வயதுவருவதற்குமுன் விவாகம்செய்வதையும், மனவொப்பமில்லாமல் விதவைகள் உடன்கட்டையேறுவதையும் கூடாதென்று தடுத்தார். விதவைகள் இஷ்டமிருந்தால் புனர்விவாகம் செய்துகொள்ளலாமென்றும் உத்தரவுகொடுத்தார்.

ஒவ்வொருவரும் அவரவருடைய தோற்றத்தின்படி கடவுளைப் பூஜைசெய்யும்படி இடங்கொடுத்துப் பெருமையடைந்தார். தாம் அனுசரித்த சமயத்தை அனுசரியாதவர்களை அவருக்குமுன்னிருந்த அரசர்கள் நிர்ப்பந்தம்செய்ததுபோல் அவர் எக்காலத்திலும் செய்ததில்லை.

மனிதர்களுக்குள்ள பரஸ்பர சம்பந்தம்.

மலையடிவாரங்களிலும் வனங்களிலும் வீடுவாசல்முதலியது ஒன்றுமில்லாமல் கிழங்குகளைப் புசித்துக்கொண்டு கேவலம் மிருகஜாதிகளைப்போல திரிந்துகொண்டிருக்கும் காட்டுமனிதர் அன்னியாபேட்சை வேண்டாமலே காலந்தள்ளிவிடுகிறார்கள்; இத்தன்மையான மனிதர் எங்கேயோ சிலர் இருக்கிறார்களேயன்றி விசேஷமாகக்கிடையாது. இவ்வுலகத்தில் ஏறக்குறைய எல்லாத்தேசங்களிலும் நாகரீகம் சிலவற்றில் அதிகமாகவும், சிலவற்றில் உபாயமாகவும் பரவியிருக்கிறது. இப்படிப்பட்ட தேசங்களில் ஜனங்கள் அவரவர் வீட்டில் வைத்துக்கொண்டிருக்கும் பொருள்களையும் சாமான்களையும் பார்த்தால், அந்தப் பொருள்களையும் சாமான்களையும் செய்துகொடுக்க இத்தனை வேலைக்காரர்கள் வேண்டியிருக்கும் என்று கணக்கிட்டுச்சொல்லுவது முடியாது. மிக்க ஐசுவரியம் பெற்று சகலவித போகங்களையும் அனுபவிக்கிற பணக்காரன் வீட்டிலுள்ள பதார்த்தங்களைப்பார்க்க வேண்டுமென்பதில்லை; ஒன்றுமில்லை ஒன்றுமில்லையென்று அன்றாடம் வேலைசெய்து ஜீவனம்பண்ணுகிற அற்பகுடியானவன் வீட்டைப்பார்த்தால் போதும். மற்றொன்றும்வேண்டாம், அவன் மேலே போட்டுக்கொண்டிருக்கிற ஒரு துணியைப்பார்ப்போம்; அது எத்தனைவேலைக்காரர் சேர்ந்து துணியாயிற்று. பரித்திச்செடி வைத்துவளர்ப்பவன், பஞ்சு எடுப்பவன், நூல்நூற்கிறவன், நெய்கிறவன் முதலான வேலைக்காரர்கள் வேண்டியிருப்பதுந்தவிர, இவர்களுள் ஒருவரிடத்திலுள்ள சாமானை மற்றொருவரிடத்திற்குக்கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டியதற்காக எத்தனை மூட்டைக்காரர்களும் வர்த்தகர்களும் வேண்டும்? அன்றியும் அநேக சாமான்கள் ஒருதேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கு வெகுதூரம் போகவேண்டியிருப்பதால், எத்தனை கப்பல் வேலைக்காரர்களும் புகைவண்டி வேலைக்காரர்களும் வேண்டும். இதுமாத்திரமோ! இந்த வேலைக்காரர்களுடைய ஆயுதங்கள் ஒவ்வொன்றையும் செய்துகொடுக்க இதரமான வேலைக்காரர்கள் கணக்கில்லாமல் வேண்டியிருக்கும். விசித்திரமான யந்திரங்கள் எத்தனையோ இருக்கின்றன; அவைகளெல்லாம் இருக்கட்டும்; மிகவும் அற்பமான சிறு கத்தியைச்செய்ய எத்தனைபேர் தேவையாயிருக்கிறது; இரும்புவெட்டி எடுக்கிறவன்முதல் கன்னான்வரையுள்ள பல வேலைக்காரர்களுடைய கூட்டுத்தொழிலினால் கத்தி என்பது செய்யப்படுகிறது. ஒரு கத்திக்கு இத்தனைபேர் வேண்டியதென்றால் பெரிய ஆயுதங்களுக்கு எத்தனைபேர் வேண்டும். இப்படி ஒவ்வொன்றையும் பார்க்கப்போனாலோ, சமுத்திரத்தில் இறங்குகிறதுபோலிருக்கும்; நுட்பமாய் விசாரிக்கிறதென்றால் கேட்கவேண்டிய

தில்லை. இப்படி ஒரு அற்பத்துணியைப் பிடித்துப்பார்க்குங்கால் இவ்வளவு தூரம் இழுத்துக்கொண்டுபோனால், மற்றப்பதார்த்தங்களையும் தனித்தனியே இத்தன்மையாய் ஆராய்ந்துபார்ப்பது எப்படிப்பட்டகாரியம்? இந்த விஷயத்தை உள்ளாழ்ந்துபார்ப்போமானால், ஒருவன் தனக்குவேண்டிய சாமக்கிரிகைகளையெல்லாம் தானே செய்துகொள்ளுவது கூடாதகாரியம் அநேகாயிரம்பேர்கள் சேர்ந்து ஒருவர்க்கொருவர் ஒத்தாசையாகநின்று வேலை செய்யாவிடின் ஒன்றுமில்லாத ஏழைக்குக்கூட அவனுக்குவேண்டிய அற்ப பதார்த்தங்கள் கிடைக்கமாட்டா. மனிதர்கள் ஒவ்வொருவனும் தன்னால் கூடிய வேலையைச்செய்து மற்றவர்கள்செய்யும் வேலைகளின் பிரயோசனத்தைப் பெற்று பரஸ்பரம் ஒற்றுமையாக வாழ்கிறார்கள் என்று நமக்கு நன்றாய் விளங்கும்.

ஒரு கொல்லன்பிள்ளை கதை.

(தொடர்ச்சி.)

மற்றொருநாள் ஒரு வயதுமுதிர்ந்த பெரியமனுஷன் தான் ஒருவரும் அறியாத புதுமையைக் கண்டுபிடித்ததாக எண்ணிக்கொண்டு பாரடேயிக்கு முன்பாக அதைப் பரீக்ஷைசெய்து காட்டவேண்டுமென்ற விருப்பத்தோடு அவன் இருப்பிடத்துக்கு வந்தான். தான் எண்ணிவந்த கருத்தைத் தெரிவித்தவுடனே வேண்டிய சாமானையும் கருவியையும் அழைப்பித்துக் கொடுத்தான். அவற்றைக்கொண்டு பரீக்ஷைசெய்து காண்பிக்கும்போது அதை முன்னமே அறிந்திருந்தபடியால் ஆச்சரியப்படாமல் பாரடே பார்த்துக்கொண்டிருந்தான். அதைக்கண்டு பெரியமனுஷன்: "இதை நீ பார்த்ததுண்டா என்று கேட்டான்? சிறுவயதிலேயே பார்த்திருக்கிறேன்" என்று பாரடேசொன்னான். அதைக் கேட்க பெரிய மனுஷக்கு நாணமுண்டாயிற்று. அதுகண்டு அவன் கையைப்பிடித்து உச்சாகப்படுத்தி அதைரியப்படவேண்டாமென்று உபசாரவசனம் சொல்லி அனுப்பினான். இவர்களைப்போல் பாரடேயை வந்து பார்த்தவர்கள் பலருண்டு. உண்மையாகவே புதிதான சங்கதியைக் கண்டுபிடித்த சாஸ்திரிமார்களும் கண்டுபிடிக்க முழுமனதோடு முயற்சிசெய்கிற வாலிபர்களும் அவனை வந்து பார்ப்பதுண்டு. அதினால் பாரடேயிக்கு மனவருத்தம் உண்டாவதில்லை. அவர்கள் சொல்லுவதையெல்லாம் பொறுமையோடு கவனமாய்க்கேட்டு அவரவர்களுக்குச் சொல்லவேண்டியதைச் சொல்லியனுப்புவான்.

ரசாயனசாஸ்திர விஷயமாக அவனோடு ஜனங்கள் வந்து பேசுகிறதுபோகத் தூரத்திலிருப்பவர்கள் கடிதமெழுதிக் கேட்பதும்

உண்டு. தெரியாதவற்றைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு அவனுக்கு அநேக கடிதங்கள் நாடோறும் வந்துகொண்டிருந்தன. அவைகளுக்கெல்லாம் தக்க பிரிதி உத்தரம் தப்பாமல் எழுதுவான். சிறைச்சாலையில் அடைபட்டிருந்த ஒரு அரசன் சாஸ்திரவிஷயமான சிலசங்கதிகளைத் தெரிந்துகொள்ளுவதற்காக ஒரு கடிதம் எழுதினான். பாரடே அந்த விஷயமாகச் செய்யும் பரிசோதனைக்குச் செல்லும் செலவையும் கொடுப்பதாகக் கடிதத்தில் அரசன் கண்டிருந்தான். இப்படி எழுதிய அரசன் பிராஞ்சுதேசாதிபதியாகிய நப்போலியன் அக்காலத்தில் ராஜ்யத்தை இழந்து அதிதூரமான ஒரு தீவில் சிறைவைக்கப்பட்டிருந்தான். அவன் கேட்ட கேள்விகளுக்குத் தக்க மறுமொழி பாரடே கொடுத்தான்.

சிலகாலத்துக்குப்பின் பாரடே செய்த புத்தகங்களும் பிரசங்கங்களும் அச்சிற் பதிப்பிக்கப்பட்டுப் பிரசித்தமாயின. அவனுடைய பேரைக் கேளாதவர்கள் ஒருவருமில்லை. அவனுடைய புகழ் எங்கும் பரவிற்று. வெளித்தேசத்தார்கள் எல்லாரும் அவன் செய்த சாஸ்திரங்களைப்பார்த்து அவனைத் தங்களுடைய வித்வசங்கங்களில் சேர்த்துக்கொண்டார்கள். அவன் சேர்ந்திராத சங்கம் இல்லை. துரைத்தனத்தாராலும் விசேஷமான மேன்மைபெற்றான்.

அவன் இருந்த சங்கத்து அக்கிராசனாதிபதி வேலையினின்று நீங்கினபின்பு சங்கத்தார் எல்லாரும் ஒருங்குசேர்ந்து அவ்வேலையை ஒப்புக்கொண்டு சங்கத்தைக் கௌரவப்படுத்தவேண்டுமென்று பாரடேயைக் கேட்டுக்கொண்டார்கள். பாரடேயும் யோசனைசெய்து பிரதி உத்தரம் சொல்லுவதாகக் கேட்டுக்கொண்டான். யோசித்துப்பார்த்ததில் அவ்வேலையை ஒப்புக்கொள்ள அவனுக்கு விருப்பமுண்டாகவில்லை. எந்தவேலையைச் செய்வதாய் ஒப்புக்கொண்டாலும் அதைத் திருத்தமாக முழுமனதோடு செய்துமுடிப்பதேயன்றி மற்றனேகரைப்போல அரைகுறையாய்ச் செய்வதில்லை. நன்றாக நாலுபேர் மெச்சும்படியான வேலையை ஒத்துக்கொள்ளுவதேதவிர வேறொன்றை ஒத்துக்கொள்ளுவதில்லை. அக்கிராசனாதிபதி வேலையை ஒத்துக்கொள்ளவேண்டுமென்று சிநேகிதர் ஒருவர் பாரடேயிக்குச் சொன்னார். அவ்வேலை பார்ப்பதாயிருந்தால் புதிய ஏற்பாடுகள் செய்யவேண்டியதாயிருக்கும். அப்படிச் செய்வதற்குச் சங்கத்தார் எல்லாருக்கும் விருப்பமிராது என்று சொன்னான். நீர் சொல்லும் ஏற்பாடுகள் ஒன்றையும் தட்டாமல் அங்கீகாரம் செய்வார்கள். அதற்கு யாதொன்றும் யோசிக்கவேண்டியதில்லையென்று சிநேகிதர் மறுத்துக்கூறினார். இதையெல்லாம் கேட்டபின்பும் அவனுக்கு அவ்வேலையின்மீது விருப்பமுண்டாகவில்லை. இறுதியில் அவ்வேலைபார்க்கச் சம்மதமில்லையென்று சொல்லிவிட்டான்.

இந்தப் பெயர்பெற்ற சாத்திரியாகிய பாரடே என்பவனுக்குத் துரைத்தனத்தார் வெகுமானமாக வருஷம் ஒன்றுக்கு மூவாயிரம் ரூபாய் கொடுப்பதாகவும், அதைத் தயைசெய்து அங்கீகரிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். அதை அவரிடத்தில் சொல்லப்போன பெரிய உத்தியோகஸ்தர் ஒருவர் அதைச் சொல்லுகிற மரியாதையோடு சொல்லாமல் மரியாதையின்றி வாய்தவறிப்பேசினார். இதைக் கேட்க அவனுக்கு மனவருத்தம் உண்டாயிற்று வெகுமானம் வேண்டியதில்லையென்று சொல்லிவிட்டான். இவ்வாறு நடந்த சங்கதிகளையெல்லாம் கேள்வியுற்ற அக்காலத்து அரசராகிய உல்லியமென்பவருக்குச் சற்று மனஸ்தாபத்துக்கு இடமுண்டாயிற்று. பின்பு அவருடைய மந்திரி அதிக பிரயாசையோடு வெகுமானத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று உபசாரம் சொல்லி அவன் பெற்றுக்கொள்ளும்படி செய்தார். அவனும் திருப்தியடைந்தான். 1858ஆம் வருஷம் நம்முடைய ராஜாத்தி பாரடேயினுடைய பெரும்புகழைக்கேட்டு தன் அரமனைக்கு எதிரிலிருந்த ஒரு சிங்கார பங்களாவில் வந்து குடியிருக்கும்படி உத்தரவுசெய்தார். அந்தப் பங்களாவில் பாரடே அநேகநாள் குடியிருந்தான்.

1861ஆம் வருஷத்தில் தன் வேலை முழுவதும் பார்க்கிறதற்குச் சக்தியில்லாமையினாலே அதிற் சில பாகத்திலிருந்து விலகிக்கொள்ளும்பொருட்டுச் சங்கத்தாருக்குக் கீழேவருமாறு கடிதம் எழுதினான். "நான் இந்தச் சங்கத்திற் சேர்ந்தது 1813ஆம் வருஷம்; இப்போது சற்றேறக்குறைய நாற்பத்தொன்பது வருஷமாகின்றது. மத்தியில் சொல்பகாலம் டேவியென்பவரோடு வெளித்தேசங்களுக்கு யாத்திரைபோயிருந்தேன். அதுபோக மற்றைக்காலமெல்லாம் உங்களோடிருந்திருக்கிறேன். உங்களெல்லாருக்கும் என்மீது பக்ஷம் விசேஷமாயிருந்தது. சங்கத்தார் என்விஷயத்தில் அதிக கவலையோடிருந்தார்கள். இதையெல்லாம் எண்ணிப்பார்க்கும்போது எனக்கு உண்டாகும் சந்தோஷத்துக்கு அளவில்லை. எனக்கு உண்டாகிய நன்மைக்கெல்லாம் கடவுளுக்கு முதலில் வந்தனம்செய்கிறேன். இரண்டாவது நீங்கள் எனக்கு எப்போதும் தவிராமல் செய்துவந்த பேருதவிக்காக உங்களுக்கு வந்தனம் செய்கிறேன். உங்களைப்போலவே உங்களுக்கு முன்னிருந்தவர்களும் எனக்கு உபகாரம் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கும் மறவாமல் வந்தனம்செய்கிறேன். என் வாழ்நாள்முழுதும் நான் பாக்கியசாலியாக இருந்தேன். எனக்கு யாதொரு குறைவுமில்லை. சங்கத்துக்கு என்னாற்கூடிய உதவிசெய்திருக்கிறேன். சாத்திரத்திலும் எனக்குத்தெரிந்த அளவு பிறருக்குப் போதனைசெய்திருக்கிறேன். இப்போது எனக்கு வயதாய்விட்டது. தேகமும் மனதும் தளர்ந்து போகின்றன. ஆயினும் என் கடைசிநாள்கள் சுகமாகவேயிருக்

கின்றன. தேகத்திலுள்ள பலம் குறைந்தபோதிலும் சௌக்கியத் தாழ்வில்லை. நோயென்பது கிடையாது. மனோவலியும் தளர்ந்து வருகின்றது. கியாபகம் முன்போல இல்லை. ஆயினும் மனதிலுள்ள உற்சாகத்துக்கு யாதொரு குறைவும் காணப்படவில்லை.''

மற்றொரு சங்கத்திலும் வேலைபார்த்துவந்தான். தள்ளாமையால் அந்தவேலையும் செய்துவருவதற்குச் சரிப்படவில்லை. ஆகையால் வேலையைவிட்டு நீங்கவேண்டுமென்று அந்தச் சங்கத்தாருக்கு எழுதிக்கேட்டதில் அவர்கள் விசனமுற்று வேலையினின்று நீங்கினபோதிலும் அவர் சங்கத்துக்குச்செய்த பேருதவிக்குச் சிறு கைம்மாறாக வருஷம் ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். வேலைசெய்யாமல் பணம் வாங்குவதற்கு அவனுக்கு எப்போதும் விருப்பமிருந்ததில்லை. ஆகையால் அதற்குச் சம்மதமில்லையென்று தெரிவித்து வேலையையும் ஒப்புக்கொடுத்துவிட்டான்.

வரவர அவனுடைய தேகபலமும் மனோதைரியமும் குறைந்துகொண்டேவந்தன. அநேக வருஷமாக ஞாபகம் குறைந்துகொண்டுவந்தது. உலகத்தினுடைய ஆசாபாசங்களெல்லாம் ஒவ்வொன்றாக மறைந்துபோயின. கடவுளுடைய நாட்டமே எப்போதும் இருந்துகொண்டிருந்தது. அவனோடுகூட சங்கத்தில் வேலைசெய்துகொண்டிருந்தவர் ஒருவர் அக்காலத்தில் பாரிசவாயுவினால் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தார். அவரை அழைத்து ''சிநேகிதரே! நீரும் நானும் ஒன்றுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறோம். அதைத்த விரநாம்செய்வது வேறொன்றுமில்லை. அதைப் பொறுமையோடு செய்யமுயலவேண்டும்'' என்று சொன்னார். அவனுடைய சுற்றத்தாரில் துரைசாணி ஒருவளிருந்தாள். அவள் பெயர் டீகன். அவளுக்குக் கீழே வருமாறு ஒரு கடிதம் எழுதினான். ''கிறிஸ்தவர்களுக்கு மரணத்தினால் பயம் ஒன்றுமில்லை. மரணத்தை யோசித்தபின்பு பரகதி கியாபகம்வருகின்றது. பாவத்தை நினைத்தானபின்பு புண்ணியத்து எண்ணம்வருகின்றது. என்னுடைய மனோகரணங்களெல்லாம் நாளாவர்த்தியில் குறைந்துபோயின. அவைபோனபோதிலும் பரகதியாகிய பெரிய பயன் அவைகளால் குறைவதில்லை. அதை யோசிக்க எனக்கு மனவெழுச்சி உண்டாகின்றது. மனவலிமை போனபிற்பாடு நாம் சிறுபிள்ளைகளைப்போலாகிறோம்.'' இன்னும் சிலநாள் பொறுத்துப் பாரீசுபட்டணத்திலுள்ள ஒருவருக்குக் கீழே வருமாறு எழுதினார். ''எல்லாரையும் படைத்து ரக்ஷிக்கிற கடவுளுக்கு வணங்குகிறேன். என்னை அவர் இவ்வுலகத்தினிருந்து மீட்கும்காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.''

தேகமும் மனமும் தளர்ந்தபிற்பாடு நாடோறும் சாயந்தரத்தில் தன் வீட்டுஜன்னலுக்கு எதிரில் உட்கார்ந்து சூரிய அஸ்தம

னத்தைப் பார்த்துக்கொண்டேயிருப்பான். ஒருநாள் ஆகாயத்தில் இந்திரவில் காணப்பட்டது. அதைப்பார்க்கும்படி அவன் மனைவிசொன்னாள். அதைப்பார்த்து அது கடவுளிருப்பதாகச் சாக்ஷிசொல்லுகிறதென்று சொன்னான். 1867-ம்௵ ஆகஸ்டு௴ 25௳ பாரடேயென்பவன் பரகதியடைந்தான்.

இறந்துபோவதற்கு முன்பாகத் தன் மரணகிரியைகள் சாதாரணமாக நடத்தவேண்டுமென்று சொல்லியிருந்தான். வீண்டம்பத்தில் அவனுக்கு விருப்பமில்லை. அவன் சொன்ன உத்திரவுபிரகாரம் பிரேதத்தையெடுத்து வீண் ஆரவாரமின்றிக் கல்லறையில் அடக்கம்செய்துவிட்டார்கள். அவனைத் தெரிந்தவர்கள் யாவரும் வந்து பிரேதத்தைப் பார்த்துப்போனார்கள். வெளியிலிருந்தும் அநேகம்பேர் வந்திருந்தார்கள்.

பாரடே இறந்துபோயும் அவன் பெயரை ஒருவரும் மறந்துபோகவில்லை. அவன் ஞாபகத்துக்காக அவனைப்போல் ஒரு சிலை செய்துவைக்கும்படியாக வேலைநடந்துவந்தது. அவன் பேரால் பிரசங்கம் செய்துவரும்படி ஒரு பண்டிதரை ஏற்படுத்தி அவருக்குச் சம்பளமும் கொடுத்துவருகிறார்கள். பாரிசுபட்டணத்தில் ஒரு தெருவுக்குப் பாரடேதெருவென்று பெயரிட்டார்கள். அவனைப்பற்றிப் புகழ்ந்தெழுதிய புத்தகங்கள் பலஉள. இவ்வாறு பற்பலவிதமாக அவனுக்கு இறந்தபின்பும் மரியாதைசெய்தார்கள்.

இதுவரைக்கும் பாரடேயினுடைய ஆயுட்காலத்தில் நடந்த முக்கியமான சங்கதிகளை ஒருவாறு சொல்லிமுடித்தோம். கொல்லன் மகனாய்ப்பிறந்து கூலிக்குவேலைசெய்து சிறிதுகாலம் பிழைத்துப் பின்பு பெருமுயற்சிசெய்து சாத்திரசங்கத்தில் ஒரு அற்பவேலையிலமர்ந்து நாளுக்குநாள் பெருமைபெற்று யாவரும் மரியாதை செய்யத்தக்க சாத்திரியென்று பெயரெடுத்துக் கடைசியில் அந்தச் சங்கத்திலேயே அக்கிராசனாதிபதியாவதற்கு மனவிருப்பமில்லாமல் அந்தப் பெரிய கௌரவத்தை வெறுத்தவனாகிய ஒருவனுடைய சரித்திரத்தைப் படித்துப்பார்த்தோம். இனி அவன் விருத்தியடைந்த விதத்தை இன்னதென்று தெரிந்துகொள்ளவேண்டும். அவன் தாழ்ந்தகுடும்பத்தில் பிறந்தவனாயிருந்தும், அவனுக்கு அரசன்முதலாக சகலரும் மரியாதை செய்ததற்குக் காரணமென்ன? வெளித்தேசத்தாரெல்லாரும் அவன் கதையை ஆவலாய்க் கேட்டு மகிழவேண்டியதென்ன? வித்வசங்கத்தாரெல்லாரும் அவனுக்குப் பெருமைதங்கிய பட்டங்களைக் கொடுத்தவிதம் என்ன? இதைச் சற்று யோசித்துப்பார்க்கவேண்டும். அவனோ பணக்காரனல்லன். பணத்தைச்சேர்க்கிற தொழிலிலிருந்து தானே விலக்கிக்கொண்டான். பெரிய பிரபுவென்று பெயரெடுக்கவேண்டியதென்றும் அவனுக்குச் சற்றேனும் விருப்பமில்லை. இப்

பேர்ப்பட்ட விஷயங்களை அவன் கவனித்ததில்லை. சிலர் நல்ல குலத்திற் பிறந்ததினாலேயே பெயரெடுக்கிறதுண்டு. பாரடேயினுடையதோவெனில் இழிகுலம். கொல்லக்குடியிற் பிறந்தவனை யார்மதிப்பார்? தகப்பன் திரண்ட திரவியம் சம்பாதித்துவைத்திருந்தால் அது மகனுக்குப் பேருதவியாயிருக்கும். விசேஷமான சாத்திரங்களைப் படித்துமுடிப்பதற்குச் செல்லும்செலவைத் தகப்பனுடைய ஆஸ்தியிலிருந்து எடுத்துச் செலவுசெய்யலாம். மகன் தானாக வருத்தப்பட்டுச் சம்பாதியாமல் சாத்திரப்பயிற்சியில் காலம்கழிக்கலாம். பாரடேயினுடைய தகப்பன் ஒரு கொல்லன்; அவன் தன்பிள்ளைகளைக் காப்பாற்றுவதே பெரியகாரியமாயிருந்தது. ஆகையால்தான் பாரடேயும் வாலிபத்திலேயே வேலையில் அமர்ந்துவிட்டான். உயர்ந்தநிலைமையில் பிறந்திருக்கிறவர்கள் எளிதில் பெரிய பிரபுக்களைப்பார்க்கவும், அவர்களுடைய சிநேகத்தைச் சம்பாதிக்கவும், அவர்களால் நினைத்தகாரியத்தை முடிக்கவும் கூடும். கொல்லனுக்கோவெனில் இவையெல்லாம் விசேஷபிரயத்தனத்தாலாகவேண்டிய விஷயங்கள். முயற்சிசெய்தாலும் நிறைவேறுகிறது அரிது. சிலர் அதிஷ்டவசத்தால் இழிகுலத்திற்பிறந்தும் உயர்குலத்தாரோடு சிநேகம்செய்து விர்த்தியடைகிறார்கள். அப்படிப்பட்ட அதிஷ்டமும் பாரடேயிக்கு இருந்ததில்லை. அவன் விருத்தியடைந்ததெல்லாம் அவனுடைய நற்குண நற்செய்கையாலேயேயன்றி வேறொன்றினாலல்ல. அவனுடைய குணாதிசயங்களை நன்றாய் ஆராய்ந்துபார்க்கவேண்டும். அவன் எ.ந்தெந்த குணங்களாலும் செய்கைகளாலும் விருத்தியடைந்தானென்பதைத் தெரிந்துகொள்வோமானால் நம்முடைய விருத்திக்கும் அதேகுணங்களும் செய்கைகளும் ஏதுவாகும்.

பாரடேயிக்கு அதிஷ்டமில்லாவிடினும் பெரியவிக்கினம் ஒன்றுமில்லை. இழிகுலமாயினும் அவுன் வமிசத்தார் கெட்டவர்களென்று பெயரெடுத்ததில்லை. மரியாதையாகவே காலத்தைக் கழித்தார்கள். அவர்கள்மீது யாதொரு பழுதுசொல்வதற்கும் இடமில்லை. அவர்களெல்லாரும் மானிகள். எக்காலத்திலும் எவ்விஷயத்திலும் அவமானமடைந்தவர்களல்லர். அவன் தெளிவான அறிவுடையவன். நுணிப்பில் மேய்கிற வழக்கமில்லை. எந்தகாரியமானாலும் தீரவிசாரித்தறிவதே அவனுடைய வழக்கம்.

சமாசாரம்.

டில்லியில்கூடும் ராஜசபை.—மகாராணியார் அவர்கள் இந்துதேசத்துக்குத் தாம் சக்கரவர்த்தினி என்கிற பட்டத்தை வகித்துக்கொண்டார்கள். அதைப் பிரசுரப்படுத்தும்பொருட்டு நாளது ஜனவரிமீ" முதல் தேதி டில்லிமாநகரத்தில் ராஜசபை கூடப்போகின்றது. அன்றையதினம் டில்லிநகரத்தில் சகல ராஜாக்களையும் பிரபுக்களையும் காணலாம். பங்காள கவர்னர்ஜனரலவர்களும், சென்னை, பம்பாய்முதலிய ராஜதானிகளின் கவர்னர் துரைகளும் அந்த நகரத்தில் வந்து சேருவார்கள். அந்த ராஜசபையில் கவர்னர்ஜனரல் துரையவர்கள் சபாநாயகராக வீற்றிருந்து மகாராணியாரவர்கள் வகித்துக்கொண்ட சாம்பிராஜ்ய பட்டத்தை விளம்பரப்படுத்துவார். இந்த மகோத்சவத்துக்குத்தக்கபடி சகல ஆயத்தமும் நடந்துவருகின்றது. எள்ளளவும் குறைவிராது. இந்தநாட்டின் ராஜாக்களுக்கும் மகாராணியாரவர்களுக்கும் இருக்கிற வாஸ்தவமான சம்பந்தத்தைக் குறிக்கும்பொருட்டாகப் புதியபட்டம் வகிக்கவேண்டுமென்று நெடுநாள் யோசனையாக இருந்தது. முதல்முதல் கொண்ட எண்ணமும் செய்த பிரயத்தனமும் சர்வசம்மதமாயிருக்கவில்லை. ஆதலால் பட்டம் வகிப்பதற்குத் தாமதம் நேரிட்டது. சக்கரவர்த்தினி என்று பட்டம்பெறுவதில் பார்லிமெண்டு சபையில் பெரும்பான்மையோர் ஆக்ஷேபமில்லை. அப்பட்டமும் வாஸ்தவமான சம்பந்தத்தை நன்றாய்க் குறிக்கத் தகுந்ததாயிருந்தது. இது யாவருக்கும் சம்மதமென்று தெரிந்தபின்பு மகாராணியாரவர்கள் வகித்துக்கொள்ள ஒத்துக்கொண்டார்கள்.

நமது தேசத்தை முன்னமே கம்பினியார் அரசாண்டுவந்தார்கள். அவர்கள் அரசாக்ஷியை மகாராணியாரவர்களுக்கு ஒப்பித்தபோது டில்லிச்சக்ராதிபதிகளுடைய அதிகாரத்தையும் அவர்கள் வகித்துக்கொண்டார்கள். ஆயினும் அக்காலத்தில் அவ்வதிகாரத்தையும் நமது தேசத்து ராஜாக்களுக்கும் தமக்கும் உண்டான சம்பந்தத்தையும் வெளிப்படையாகக் குறிக்கத்தக்க பட்டத்தைத் தரிக்கவில்லை. அப்போது அதைச் செய்யாமல்விட்டது நியாயமே. புதியபட்டம் தரித்துக்கொள்ளாமையால் சில சமயங்களில் சந்தேகம் பிறந்தது. கவர்னர்ஜனரலவர்களும் தாம் ராஜாக்களுக்கு அனுப்பும் நிருபங்களில் மகாராணியாரவர்களுடைய நிலைமை இன்னவாறென்று தீர்மானமாகாமையால் தோன்றியபடி எழுதிவந்தார்கள். இதனால் அசந்தர்ப்பம் உண்டாகிறதென்றும், அதை நிவர்த்திசெய்யும்பொருட்டு மகாராணியாரவர்களுக்குச் சக்கரவர்த்தினி என்று பட்டம் சூட்டவேண்டுவதென்றும் கவர்னர்ஜனரலவர்கள் சீர்மைக்குத் தெரியப்படுத்தினர். தவிரவும், சென்றவருஷம் யுவராஜரவர்கள் இவ்விடம் வந்தபோது நாமும் நம்முடைய ராஜாக்களும் செய்த மரியாதையைக்கேட்டு, மகாராணியாரவர்கள் சக்கரவர்த்தினி என்று பட்டம்வகிப்பது நம்மெல்லோருக்கும் சம்மதமாயிருக்குமென்று, சீர்மையிலுள்ளோர் ஊகிப்பதற்கு இடமுண்டாயிற்று. இக்காரணங்களால் திருத்தியடைந்து மகாராணியாரவர்கள் நமக்குச்சக்கரவர்த்தினி என்று பட்டம் வகித்துக்கொள்ள விருப்பமிருப்பதாகத் தெரிவித்தார்கள். நாளதுவரையில் மகா

ராணியாரவர்கள் சீர்மைக்கு அரசியென்றும், அத்தேசத்தாரை சம்ரக்ஷணைசெய்கிறவர்களென்றுமே எண்ணியிருந்தோம். இனிமேல் அப்படியன்று. தம்முடைய தேசத்தாரைப்போலவே நம்மையும் பாவித்து, நம்முடைய நன்மைதீமையைத் தம்முடையதாகவே உறுதியாக எண்ணி, நமது தேசத்து ராஜாக்களுக்குக் குறைவு நேரிடாமல் பாதுகாத்துவருவார்கள். அதன்பொருட்டாகவே மகாராணியாரவர்கள் அகமகிழ்ந்து சக்கரவர்த்தினி என்று திருநாமம் சூட்டிக்கொண்டார்கள். நம்மை முன்னிலும் அதிகமாகக் கவனித்துக் குறையைநீக்கி ரக்ஷிப்பதற்கே இந்த ஏற்பாடு உண்டாயிற்று. விபரீதமான சந்தேகம் கொள்வதுகூடாது. மகாராணியாரவர்கள் வகித்துக்கொண்ட புதியபட்டத்தால் புதிய அதிகாரம் வந்துவிடவில்லை. டில்லிச் சக்கராதிபதிகளாகிய மோகலாயருடைய காலம் முடிந்தபின்பு அவர்கள் அரசாக்ஷியையும் அதிகாரத்தையும் கம்பினியார் பெற்றுக்கொண்டார்கள். கம்பினியார் பின்னிட்டு ராஜ்யபாரத்தை மகாராணியாரவர்களுக்கு ஒப்புவித்தபோது மோகலாயருடைய அதிகாரமும் ஏகசக்ராதிபத்தியமும் மகாராணியாரவர்களுக்குக் கிடைத்தன. ஆகையால் புதிய அதிகாரத்தைப் பெறுவதற்காக அன்று; வாஸ்தவமாயிருந்த நிலைமையைத் தெரியப்படுத்துவதற்காகவே புதியபட்டம் ஏற்பட்டது. நூதனமாக ஏகசக்ராதிபத்தியம் உண்டாயிற்றென்று பிதற்றுவதெல்லாம் தெரியாமை.

சென்றவருஷம் யுவராஜர் அவர்க்ள் இத்தேசத்துக்கு வந்தபோது நடந்த மகோத்சவத்தை நாமெல்லோரும் கண்டிருக்கிறோமே. அக்காலத்தில் இந்துதேசத்து ராஜாக்களுக்கு அவர் செய்த மரியாதை யாவருங்கண்டு மகிழத்தக்கவைகளாயிருந்தன. அவரிடத்தில் தோன்றிய பிரியமெல்லாம் உண்மையானது. அங்கிலேயருடைய அரசாக்ஷி நிலைநிற்பதற்கு ராஜாக்கள் சிநேகமும் வாச்சல்யமும் விசேஷமான ஆதாரவாக இருக்கின்றன. இதெல்லாம் தெரியும்பொருட்டாகவும் புதியபட்டம் சூட்டுவதற்கு நேரிட்டது. 1862-ம்௵ கன்னிங்குப்பிரபுவானவர் கவர்னர்ஜனரலாக விளங்கினபோது, அவ்வருஷத்தில் நமது தேசத்துராஜாக்களைக் கணக்கிட்டு அவர்கள் 154 பேரென்று தீர்மானம்செய்து அவர்களெல்லோரும் மகாராணியாரவர்களுடைய அரசுக்குள் அமைந்தவர்களென்று சன்னதுபிறந்தது. அவ்வுத்தரவின் பிரயோசனம் இளவரசரவர்கள் வந்தபோதுதான் சகலருக்கும் தெரியவந்தது. அவருடைய வரவினால் நமக்குண்டான சந்தோஷம் இன்னும் மாறவில்லை. ராஜர்க்களும் அவர்களுக்குக் கிடைத்த மரியாதையை என்றைக்கும் மறவார்கள். அவர்களுக்கும் மகாராணியார்வர்களுக்கும் இருக்கிற சிநேகத்தால் நமக்கு மிகுதியான சௌக்கியமுண்டாகும். இதற்கு எவ்வளவும் ஐயமில்லை. ராஜாக்களை நம்பி நன்மைவரினும் தீமைவரினும் அவர்கள் ஆணைதவறாமல் நடப்பது நம்முடைய வழக்கம். இவ்விதவழக்கத்தை அனுசரிக்கிற நமக்கு ராஜாக்களும் அங்கிலேய துரைத்தனத்தாரும் ஒன்றுசேர்ந்து ஐக்கியமாயிருப்பதைக் கண்டமாத்திரம் மகாராணியாரவர்களுடைய அரசாக்ஷியில் நம்பிக்கைவருவதற்கு இடமுண்டாகும். நமக்கும் நம்முடைய ராஜாக்களுக்கும் மகாராணியாரவர்களால் சகல சம்பத்தும் பெருமையும் கீர்த்தியும் உண்டாகின்றன. நம்முடைய கோரிக்கையெல்லாம் மகாராணியாரவர்களாலேயே நிறைவேறுகின்றன. இதை உறுதியாக நம்பி நடக்கவேண்டும். இவ்விதமான அபிப்பிராயங்களைக்கொண்டு டில்லிநகரத்தில் ராஜசபை கூடப்போகின்றது. அந்தச் சபைக்கு வரப்போகிற ராஜாக்கள் காணிக்

கை செலுத்தவேண்டியதில்லை, அதினாலேயே அதைத் தர்பார் என்று சொல்வதை ஒழித்துச் சபையென்று பெயரிட்டிருக்கிறார்கள். அது டில்லிநகரத்துக்கு அருகிலுள்ள பெரிய மைதானத்தில் நடக்கப்போகின்றது. முற்காலத்தில் மோகலாயர் படையெடுத்துவந்து நமது தேசத்தைக் கைக்கொள்ளும்பொருட்டாக ஐந்து தரம் சண்டைசெய்த பானிப்பட்டென்கிற யுத்தகளம் அந்த மைதானந்தான். இருபதுவருஷத்துக்குமுன்பு மோகல்ராஜ்யம் அடியோடு துலைந்துபோகும்படிக் கலகமுண்டான இடமும் அந்த மைதானந்தான். நாளது ஜனவரிமீ முதல்தேதியன்றைக்குச் சகல ஆடம்பரத்தோடுங்கூட மகாராணியாரவர்கள் சக்கரவர்த்தினி என்று பட்டம்தரித்துக்கொண்ட சந்தோஷசமாசாரம் ராஜசபையில் யாவரும் கேட்டு மகிழும்படியாகப் பிரசித்தம் செய்யப்போகிற இடமும் அந்த மைதானந்தான்.

மேற்படி சபைக்கு விஜயம்செய்கிற ராஜாக்களையும் பிரபுக்களையும் உபசரிப்பதற்காகச் சகல ஏற்பாடும் நடந்துவருகின்றன. ராஜாங்கச்செலவில் அவர்களுக்கெல்லாம் விருந்துநடக்கும். தேசமெங்கும் வருகிற ஜனவரிமீ முதல் தேதி திருநாளாகக் கொண்டாடப்படும். ஒவ்வொரு பட்டணத்திலும் அன்றைக்குச் சபைகூடி மகாராணியார் தரித்த சக்கரவர்த்தினி பட்டத்தை விளம்பரம் செய்வார்கள். போர்ச்சேவகருக்கு விசேஷமாய்ப் படிகிடைக்கும். நம்முடைய ராஜாக்களைப்போலவே துரைத்தனத்தாரும் ஏழைகளுக்குத் தானதருமம் செய்வாராகில் பார்க்கிறவர்களுக்கு அழகாயிருக்கும். வீண்செலவுசெய்வது சரியன்று. வைத்தியசாலையும் சத்திரமும் கட்டிவைத்தால் நெடுநாளைக்கு ஞாபகமிருக்கும். மகாராணியாரவர்களும் தமது சந்தோஷத்தைத் தெரிவிப்பதற்காக ராஜாக்களுக்கு வெகுமதி செய்வார்களென்று காண்கிறது. இனி இத்தேசத்தில் இதைப்போல் ஒரு விசேஷம் நடக்குமென்று தோன்றவில்லை. ஆதலால் இந்த மகோத்சவம் நீடூழிகாலமட்டும் மறவாதிருக்கத்தக்க ஏற்பாடு செய்யவேண்டியது அதிகாரிகளுடைய பொறுத்தகடைமை.

அதிக பிரியத்தோடு நமக்குச் சக்கரவர்த்தினியாகப்போகிற மகாராணியாரவர்கள் சகல போகபாக்கியமும் அனுபவித்துப் பல்லாண்டு பல்லாண்டு வாழும்படியாகக் கடவுள் அனுக்கிரகிப்பாராக.

காற்றுமழை.—நாளதுமாசம் முதலில் பங்காளத்தில் பிர்ம்மபுத்திரா நதிமுகத்துக்கு அடுத்த தீவுகளில் பெரும்புசல் அடித்து, சமுத்திரம் பொங்கி நதிகளின்வழியாய் வெள்ளம்புறண்டோடி, இதுவரையில் நாம் கேளாத ஆபத்து நேரிட்டதாம்! இரண்டுலக்ஷத்துப் பதினையாயிரம் ஜனமும்; எண்ணிறந்த காலிகளும், அறுவடைத்தருணமாயிருந்த பயிரும் வெள்ளத்தில் மூழ்கி நசித்துப்போனதாய்த் தெரியவருகிறது. டக்கென்ஷாபாப்புரி என்னும் தீவில்மாத்திரம் 70,000 ஜனம் மடிந்துபோயினவாம்! இந்தவருஷம் இத்தேசத்தில் பஞ்சத்துக்கு முதற்காரணமான அதிவிருஷ்டி அனுவிருஷ்டி என்னும் இரண்டு தீமைகளும் நேரிட்டன. இதன்றோ காலப்பிரபாவம்!

Printed at the C. K. S. Press.

H.R.H. PRINCESS BEATRICE.

மகாராணியாரவர்களின் அருமைமகள்.